வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=

## உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ. ஒரு மில்லியன்!

கொழும்பு, நவ. 28

அதிக மழையுடன் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட திடீர் அனர்த்தங்களால் உயிரிழந் தவர்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபாய் வழங்குமாறு ஜனாதிபதி நிதியத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதன்படி, இறந்தவர்களின் உறவினர்களுக்கு இந்த நிதியை உடனடியாக வழங்க ஜனாதிபதி நிதியம் திட்டமிட்டுள்ளது. (அ)

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 28.11.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 332 பக்கங்கள் : 08

# இயற்கை இடருக்கு மத்தியிலும் நேற்று மாவீரர்களுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி!

### வடக்கு-கிழக்கு எங்கிலும் நினைவேந்தல் நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், நவ. 28

தமிழினத்தின் விடுதலைக்காக போராடி - களமாடி உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களை அஞ்சலிக்கும் மாவீரர்கள் நாள் நேற்று வடக்கு - கிழக்கு எங்கிலும் உணர்வுபூர்வமாக நினைவேந்தப்பட்டது. கொட்டும் மழை மற்றும் பேரனர்த்தங்களுக்கு மத்தியிலும் மாவீரர் நினைவேந்தலை நேற்று மாலை பேரெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் சீரற்ற வானிலை நிலவுகின்றபோதிலும் கொட்டும் மழைக்கும் மத்தியில் மிகவும் 07

## உருவாகியது 'டித்வா' புயல்!

யாழ்ப்பாணம், நவ. 28

டித்வா புயலானது வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது. இது தற் போது மட்டக்களப்புக்கும் அமபாறைக்கும் இடைப்பட்ட மகா ஓயா பகுதியில் மையம் கொண்டுள்ளது என யாழ்.பல் கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது தொடர்ந்து வடக்கு வட மேற்கு திசையில் நகரும். தற்போதைய நிலையில் இந்த புயலின் மையப்பகுதி முழுவதும் நிலத்தின் ஊடாகவே நகரும் வாய்ப்புள்ளது. ஆனாலும் நகர்வுப்பாதை இன்னமும் இறுதியாகவில்லை.

இந்த புயலின் மையம், மற்றும் உள்வளையம் ஆகியன வடக்கு மாகாணத்தின் முழுப் பகுதியையும் உள்ளடக்கியே நகரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இதன் தற்போதைய நகர்வின் படி எதிர்வரும் 07

## மோசமான காலநிலையால் நாட்டில் 50 பேர் உயிரிழப்பு!

### பதுளை மாவட்டத்தில் கடுமையான சேதம்



கொழும்பு, நவ. 28

இலங்கை முழுவதும் நிலவும் மோசமான காலநிலை காரணமாக 50 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளதுடன் 20 இற்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளனர்.

நாடு முழுவதும் பெய்யும் கனமழை, வெள்ளம், பலத்த காற்று மற்றும் மண்சரிவுகளால் பல்லாயிரக்கணக்கானோர் 07

## நிவாரணங்களை வழங்க உடனடியாக தலையிடவும்!

### கட்சி, எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு ஜனாதிபதி அநுர அறிவுறுத்தல்

கொழும்பு, நவ. 28

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மற்றும் ஆபத்தில் உள்ள மாவட்டங்களுக்கு உடனடியாக சென்று பார்வையிடுமாறு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அவசரகால பேரிடர் நிலைமை மற்றும் நிவாரண சேவைகள் குறி து ஆராய்வதற்காக நேற்று காலை பாராளுமன்ற 07

## வைத்தியசாலையில் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, நவ. 28

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வழமையான பரிசோதனைக்காகவே அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாக அவரது ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் சுகாதார நிலைமை திருப் திகரமாக இருப்பதாக ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## அரச நிறுவனங்களுக்கு இன்று விசேட விடுமுறை

கொழும்பு, நவ. 28

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச ஊழியர்களுக்கும் இன்று வெள்ளிக்கிழமை விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சு இதனை தெரி வித்துள்ளது.

சீரற்ற வானிலையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

## ஏ 9 வீதியில் போக்குவரத்து பாதிப்பு!

வவுனியா, நவ. 28

வவுனியா மற்றும் ஓமந்தைக்கு இடையிலான வெள்ளப்பெருக்கு காரணமாக நொச்சிமோட்டை பகுதியில் ஏ-9 வீதி மூடப்பட்டதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். 07

## உயர்தரப் பரீட்சைக்கான புதிய திகதிகள் அறிவிப்பு

கொழும்பு, நவ. 28

மோசமான காலநிலை காரணமாக நேற்று வியாழக்கிழமை, இன்று வெள்ளி மற்றும் நாளை சனிக்கிழமைகளில் நடைபெறவிருந்த க.பொ.த உயர்தரப் பரீட்சை முறையே டிசெம்பர் 07ஆம், 08 ஆம், 09 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக உயர்தரப் பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கபட்டமை 07

## இந்திய பெருங்கடலில் நிலநடுக்கம்!

கொழும்பு, நவ. 28

இந்தோனேசியாவின் வடக்கு சுமத்திரா தீவுக்கு அப்பால் இந்தியப் பெருங்கடலில் நேற்றுக் காலை 6.6 ரிச்டர் அளவுகளில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இலங்கைக்கு சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை மையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையின் 07

## சீரற்ற காலநிலை காரணமாக பாராளுமன்றமும் ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 28

நாட்டில் நிலவும் பேரிடர் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இன்றும் நாளையும் பாராளுமன்றத்தில் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதங்களை நடத்துவதில்லை என்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் பாராளுமன்ற வளாகத்தில் நடை பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, திங்கட்கிழமை பாராளுமன்றம் மீண்டும் கூட உள்ளது. மேலும் திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரு நாட்களிலும் இரவு வரை அமர்வுகள் தொடரும் என்று முடிவு 07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் கன மழையினால் 221 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்.மாவட்டத்தில் கன மழையால் 221 குடும்பங்களைச் சேர்ந்த 711 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு வீடு முழுமையாகவும் 15 வீடுகள் பகுதிகளலும் பாதிப்படைந்துள்ளது என யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதிக்கப்பட்டவர்களில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 275 அங்கத்தவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 2 குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், வேலணை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் இதன் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் பொன்னாலை பருத்தித்துறையின் ஏ.பி.019 வீதியின் 50 கி.மீ. தொடக்கம் 55 கி.மீ. வரையான பகுதி சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் அப்பாதையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் - என்றார். (அ)

# "பேராறு" குளத்தின் வான் கதவு திறப்பு



வவுனியா, நவ. 28

வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையினால் "பேராறு" குளத்தின் வான் கதவு ஒன்று நேற்று முன் தினம் புதன்கிழமை திறக்கப்பட்டது.

எனவே குறித்த குளத்தின் நீர் மன்னார் மாவட்டத்தின் பறங்கி ஆறு ஊடாக பெருக்கெடுக்க வாய்ப்புள்ளது என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மேலும் பேராறு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளதாக கூறப்படுகின்றது.

எனவே பறங்கி ஆற்றின் தாழ்நில பிரதேசங்களில் வாழும் மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# சுதேச மருத்துவத் திணைக்களம் மாங்குளத்தில் அமையவேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு மாகாணத்தின் மையப்பகுதியான மாங்குளத்தில் மாகாண சுதேச மருத் துவத் திணைக்களம் அமைக்கப்பட்டால் மட்டுமே, ஐந்து மாவட்ட மக்களும் அதன் நன்மைகளைச் சமமாகப் பெற் றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். எனவே, மாங்குளத்தில் இத்திணைக்களத்துக்காக ஒதுக்கப்பட்ட காணியில் புதிய நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்ப டுத்துமாறும் அவர் அதிகாரி களை வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் கீழ், 2025ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்கள் குறித்த மாதாந்தக் மீளாய்வு கூட்டம், ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தை அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் தற்காலிகமாக கிளிநொச்சிக்கு இடமாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், எமது நீண்டகால இலக்கு மாங்குளமே ஆகும். மாங்குளத்தில் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்ட பின்னர், திணைக்களத்தை அங்கு முழுமையாக நகர்த்தவேண்டும். அதுவே அனைத்து மாவட்ட மக்களுக்கும் இலகுவான அணுகலை வழங்கும்.

2026ஆம் ஆண்டில் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் புதிய உத்வேகத்துடன் வடக்கு மாகாணத்தில் ஒரு முன்மாதிரியான திணைக்களமாகச் செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தொடர்ச்சியாகக் கூறிவந்தீர்கள். தற்போது அப்பிரச்னை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனவே, இனியும் காரணங்கள் கூறிக்கொண்டிருக்காது மக்களுக்கான சேவைகளை வினைத்திறனுடன் வழங்க வேண்டும்.

அதிகாரிகள் முன்னறிவிப்பின்றி மருத்துவமனைகளுக்குத் திடீர் களப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். அங்குள்ள உண்மை நிலவரங்களை ஆராய்வதுடன், மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிய வேண்டும். அங்கு நிலவும் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, பிரதிப் பிரதம செயலாளர்களான (திட்டமிடல், நிதி, பொறியியல் சேவை), கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், சுகாதார மற்றும் சுதேச மருத்துவத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் கணக்காளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ)

# யாழில் ஐந்து பேர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருட்களுடன் இரு பெண்கள் உள்ளிட்ட 5 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொண்ட விசேட நடவடிக் கையின்போது, கஞ்சா போதைப் பொருளை விற்பனைக்கு வைத் திருந்த பெண் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பெண்ணை பொலிஸ் நிலை யத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, ஹெரோயின் போதைப்பொருளை உடை மையில் வைத்திருந்த நான்கு இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மூன்று நாள் காய்ச்சலால் யாழில் சிறுவன் மரணம்!

யாழ்ப்பாணம், நவ. 28

மூன்று நாள் தொடர் காய்ச்சலினால் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம், அல்வாய் கிழக்கை சேர்ந்த பிரதீபன் லக்சுதன் (வயது-17) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

மூன்று நாள் தொடர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த சிறுவனை தாயார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த நிலையில், அங்கிருந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் , நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# தொல்பொருள் திணைக்கள ஒதுக்கீட்டில் வாக்கெடுப்பைக் கோரவுள்ளது தமிழரசு!

## பாராளுமன்றில் எதிர்ப்பை பதிவு செய்யவும் தீர்மானம்

கொழும்பு, நவ. 28

புத்தசாசன, சமய, கலாசார அமைச்சுக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒதுக்கீடு தொடர்பில் நடைபெறவிருக்கும் விவாதத்தின்போது தமது வலுவான எதிர்ப்பை பதிவு செய்யவுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர்கள், அவ்வ மைச்சின்கீழ் இயங்கும் தொல் பொருள் திணைக்களத்துக்கான ஒதுக்கீடு தொடர்பில் வாக்கெடுப்பைக்கோரி, அதற்கு எதி ராக வாக்களிக்கவுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகள், இந்துக்களின் வழி பாட்டு இடங்கள் என்பன தொல் பொருள் திணைக்களத்தினால் முறையற்ற விதத்தில் கைப்பற்றப்படல் மற்றும் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பௌத்த சின்னங்கள் நிறுவப்படல் உள்ளிட்ட சம்பவங்கள் பதிவாகின்றன.

அண்மையில் திருகோணமலையில் புத்தர் சிலை நிறுவப்பட்ட விவகாரம், வாழைச்சேனை பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் பெயர்ப்பலகைகள் இடப்பட்ட விவகாரம் என்பன பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், தொல்பொருள் திணைக்களத்தின் இவ்வாறான செயற்பாடுகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆராய்ந்து வருகின்றது.

அதற்கமைய அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டத்தில் புத்தசாசன, சமய, கலாசார அமைச்சுக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒதுக்கீடு தொடர்பான விவாதம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விவாதத்தின் முடிவில் தொல்பொருள் திணைக்களத்துக்கான ஒதுக்கீடு தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வாக்கெடுப்பை கோரவுள்ளார்.

அதுமாத்திரமன்றி மேற்படி விவாதத்தின்போது தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் தமது கரிசனைகளையும், எதிர்ப்பையும் தெளிவாகப் பதிவு செய்ய விருப்பதுடன் தொல்பொருள் திணைக்களத்துக்கான ஒதுக்கீடு தொடர்பான வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிக்கவுள்ளனர். (அ)

# பாரதியார் விழாவையொட்டி திறந்த நிலைப் பேச்சு போட்டி

யாழ்ப்பாணம், நவ. 28

பாரதி விழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் திறந்தநிலைப் பேச்சுப் போட்டிக்கு 40 வயதிற்குக் குறைந்த பேச்சுத்துறை ஆர்வலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உடன் வழங்கப்படும் பாரதியாரோடு தொடர்புடைய தலைப்பொன்றில் ஏழு நிமிடங்கள் பேசுவதாக அமையும் இப்போட்டியில் 30.11.2025 அன்று 40 வயதை அடைந்த அல்லது அதற்குக் குறைந்த வயதுடைய எவரும் பங்கேற்கலாம்.

போட்டியாளர்கள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, வயது மற்றும் வாட்ஸ் அப் இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு பொதுச் செயலாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், இல 28 குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 04.12.2025 இற்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்றும் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 0777117426 என்ற இலக்கத்தில் போட்டி இணைப்பாளர் த. கருணாகரனுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

வெற்றியீட்டும் முதல் பத்துப் பேருக்கு பெறுமதியான சான்றிதழ்களும் பரிசுப் பொருள்களும் விரைவில் இந்தியத் துணைத்தூதரகத்தாரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தினரும் இணைந்து நடத்தவுள்ள பாரதிவிழாவின் போது வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.11.2023 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகள் அவசரமாக செய்யவேண்டியது?

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா விரைவில் புதுடில்லி செல்லவுள்ளார். அண்மைக் காலமாக ரில்வின் ஒரு விடயம் தொடர்பில் பேசிவருகின்றார். அதவாது, மாகாண சபை முறைமை ஒரு தோல்வியடைந்த முறைமை. புதிய முறைமை ஒன்றை கொண்டுவர வேண்டும்.

அது என்ன முறைமை? அதன் மூலம் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்னை எவ்வாறு எதிர்கொள்ளப்படும் - நீங்கள் இறுதியாக வைத்திருக்கின்றது தீர்வுதான் என்ன? இவ்வாறான கேள்விகளுக்கு ரில்வினிடம் பதில் இல்லை - ஒரு வேளை அவரிடம், அவருக்கு பிடித்தமான ஒரு பதில் இருக்கலாம் ஆனால் அதனை அவர் பொது வெளியில் இதுவரையில் வெளிப்படுத்தவில்லை.

ஆனால் மாகாண சபை முறைமை சரிவராது ஏனெனில் சிங்கள மக்களும் அதனை ஆதரிக்கவில்லை - அதே போன்று தமிழ் மக்களும் ஆதரிக்கவில்லை என்னும் வாதத்தை புதுடில்லியில் விற்பனை செய்யும் நோக்கோடுதான் டில்வின் செல்லவுள்ளார். அதற்கு புதுடில்லி என்ன சொல்லும் என்பதற்கு அப்பால், தமிழ் மக்களும் எதிர்க்கும் ஒன்றை புதுடில்லி எதற்காக தூக்கிப்பிடிக்க வேண்டும் என்னும் கருத்தை டில்வின் நேரடியாக சொல்லாவிட்டாலும் மறைமுகமாக அதனை சுட்டிக்காட்ட முயற்சிக்கலாம். இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் கட்சிகள் என்ன செய்ய வேண்டும்?

புதிய அரசியல் யாப்பு ஒன்று கொண்டுவரப்பட்டால் நிச்சயம் அதில் பதின்மூன்றுக்கு குறைவான அதிகாரங்களே உள்ளடக்கப்பட்டிருக்கும். அது வருவதற்கான வாய்ப்பு இருக்கின்றதா என்னும் கேள்வியை ஒரு புறமாக வைத்து விட்டு நோக்கினால் பதில் - இருப்பதையும் இல்லாமலாக்கும் அல்லது குறைக்கும் நோக்கோடுதான் அவ்வாறானதொரு யாப்பு வரமுடியும். எனவே தமிழ் மக்களுக்கான உச்சபட்சமான அல்லது சிலர் குறிப்பிடுவது போன்று "சிறந்த" தீர்வு ஒன்று வருவதற்கான வாய்ப்பு இல்லவேயில்லை. ஏனெனில் அரசியல் தீர்வு விடயம் என்று இறங்கினால் பல்வேறு தரப்பினரை சமாளிக்க வேண்டும். அந்த சமாளிப்புக்கள் இறுதியில், எதனையும் வழங்க முடியாத நிலைமையே ஏற்படுத்தும்.

ரில்வின் சில்வா, புதுடில்லி செல்லவுள்ள நிலையில் தமிழ் கட்சிகள் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும், அரசியலமைப்பின் பதின் மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும், அதனை வலியுறுத்த வேண்டிய பொறுப்பு இந்தியாவிற்குண்டு என்பதை வலியுறுத்த வேண்டும்.

இது தொடர்பில் ஏற்கனவே இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தை நினைவு கூர்ந்து இந்திய தூதுவரை விசேடமாக சந்தித்து, தங்களின் நிலைப்பாட்டை மீளவும் வலியுறுத்த வேண்டும். இந்தியப் பிரதமர் மோடி குறிப்பிட்டவாறு, அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துதன் ஊடாக முன்னோக்கிச் செல்லும் விடத்தில்தான் தமிழ் கட்சிகளும் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தவேண்டும்.

தமிழ் கட்சிகள் அமைதியாக இருந்தால், அது ரில்வின் சில்வாவிற்கே சாதகமாக அமையும். ஜே.வி.பி. என்னதான் தங்களை வித்தியாசமானவர்கள் என்று காண்பித்தாலும் கூட, இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பில் அவர்களிடம் பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதில் கேள்வியுண்டு. ஒரு வேளை மாற்றம் இருந்தாலும் கூட, தங்களின் அரசியல் தேவைக்காக அதனை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கலாம். இந்த இடத்தில் மாகாண சபையின் தேவையுள்ள தமிழ் கட்சிகள்தான் இதனை வலியுறுத்தி, இந்தியாவின் ஈடுபாட்டுக்கான நியாயத்தை ஏற்படுத்தவேண்டும்.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025



"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!"

- கௌதம புத்தர்

# இலங்கையர் தினத்தை பொதுவான ஒரு தேசிய நிகழ்வாக்க வேண்டும்!

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

*சகல சமூகங்களையும் ஒன்றாகக் கொண்டு வருவதற்கான தளமேடையாக கொழும்பில் இலங்கையர் தினக் கொண்டாட்டங்களை (டிசெம்பர் 12- 14 ) நடத்துவதற்கான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றது.*

*அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நிகழ்வு ஐக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.*

*அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தமிழ்க் கட்சிகளையும் முஸ்லிம் கட்சிகளையும் அழைத்து இலங்கையர் தினத்துக்கான ஏற்பாடுகள் குறித்து விளக்கம் அளித்தமை ஆக்கபூர்வமான ஒரு நடவடிக்கையாகும். இத்தகைய ஊடாட்டங்கள் நம்பிக்கையைப் பலப்படுத்துவதுடன் எல்லோரும் இந்த நாட்டுக்கு சொந்தமானவர்கள் என்ற உணர்வையும் விரிவாக்கும்.*

*இன, மத மற்றும் கலாசார அடையாளங்களுக்கு அப்பால் தாங்கள் அரவணைக்கப்படுவதாகவும் மதிக்கப்படுவதாகவும் சகல குடிமக்களும் உணரக்கூடிய வெளியை உருவாக்குவதே இலங்கையர் தின நிகழ்வின் பின்னணியில் உள்ள நோக்கு ஆகும்.*

*நாட்டின் பல்வகைமையை முழுமையாகப் பிரதிபலிக்கக்கூடியதாக இந்த நிகழ்வில் எதிரணி கட்சிகளையும் சிவில் சமூக அமைப்புக்களையும் உள்வாங்குவது மிகவும் முக்கியமானது என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.*

*மிகவும் நெருக்கடியான மோதல் காலகட்டத்தில் கூட நல்லிணக்கத்தையும் சமூகங்களுக்கு இடையிலான ஊடாட்டத்தையும் சிவில் சமூக அமைப்புக்கள் உறுதியாக ஆதரித்துச் செயற்பட்டன.*

*இலங்கையர் தினம் மேம்படுத்துவதற்கு நோக்கம் கொண்டிருக்கும் பண்புகளை சிவில் சமூக அமைப்புக்கள் உயர்வாக மதித்துக் கடைப்பிடித்து வந்திருக்கின்றன.*

*அந்த அமைப்புக்களின் அனுபவம், சமூகத்தின் அடிமட்டங்களில் அவற்றின் பிரசன்னம் மற்றும் சமூகங்களுக்கு இடையில் உறவுப் பாலங்களை கட்டியெழுப்புவதில் அவற்றின் நீண்டகாலச் செயற்பாடுகள் ஆகியவை இலங்கையர் தினம் போன்ற தேசிய முன்முயற்சிகளின் வெற்றிக்கு வளமான பங்களிப்பைச் செய்யக்கூடிய ஒரு உன்னதமான அந்தஸ்தை அவற்றுக்கு கொடுத்திருக்கின்றன.*

*ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் 1325 தீர்மானத்தின் 25 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு தேசிய சமாதானப் பேரவையுடனும் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்புடனும் (பவ்ரல்) சேர்ந்து போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் அண்மையில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றிய வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத், தேசிய சவால்களைக் கையாளுவதில் சிவில் சமூகம் அரசாங்கத்தின் ஒரு நேச அணியாக இருக்க முடியும் என்பதை ஏற்றுக்கொண்டார்.*

*சிவில் சமூகத்துடன் சேர்ந்து செயற்படுவதற்கான விருப்பம் தொடர்பில் அவர் காண்பித்த சமிக்ஞை சிவில் சமூகத்துடனான உறவுகளைப் பொறுத்தவரை, தொலைவில் இருந்து பேச்சுவார்த்தையை நடத்துவதுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஒத்துழைப்புத் தொடர்பைப் பேணும் நிலையில் இருந்து அரசாங்கம் நகரக்கூடிய சாத்தியத்தை உணர்த்துகிறது.*

*இந்த நேர்மறையான நகர்வை வலுப்படுத்துவதற்கு சிறந்த ஒரு சந்தர்ப்பமாக இலங்கையர் தினம் அமைகிறது என்று நாம் நம்புகிறோம். இந்த நிகழ்வு அதன் நோக்கத்தை சாதிக்க வேண்டுமானால், அது கொண்டாடுவதற்கு நாட்டம் கொண்டிருக்கும் கோட்பாடுகளை பிரதிபலிக்கக்கூடியதாக அதன் திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும் அமைய வேண்டியது அவசியமாகும்.*

*அதனால், இலங்கையர் தினத்துக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் சிவில் சமூக அமைப்புக்களை ஒரு கட்டமைக்கப்பட்ட முறையில் ஈடுபடுத்த வேண்டும் என்று அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம். ஒத்துழைப்பின் அடிப்படையிலான ஒரு அணுகுமுறை, நல்லிணக்கம் என்பது அரசாங்கத்தின் குறிக்கோள் மாத்திரமல்ல, பொதுவான தேசிய முயற்சி என்பதை வெளிக்காட்டும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேடம்



ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

இடபம்



மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார்.

மிதுனம்



இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும்.

கடகம்



சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப் ஆக போய் முடியும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும்.

சிம்மம்



விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சுவார்த்தை வெற்றியடையும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

கன்னி



வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். தொட்டது துலங்கும்.

துலாம்



பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

விருட்சிகம்



பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வெளியூரிலிருந்து வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

தனுசு



உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். தைரியம் கூடும் நாள்.

மகரம்



கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். தடைகள் உடைபடும் நாள்.

கும்பம்



ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

மீனம்



விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மறைமுக பிரச்சினைகள் வரக்கூடும். ஆதாயம் தரும்.

# "அரச உத்தியோகத்தர்கள் யாரும் கடமையிலிருந்து விலக முடியாது"

யாழ்ப்பாணம், நவ. 28

அனர்த்தம் ஏற்படும் போது அரச உத்தியோகத்தர்கள் யாரும் தமது கடமையிலிருந்து விலக முடியாது என்று யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

அனர்த்தத்தின் போது பொது மக்கள் அவசர உதவிகளைப் பெற்றுக்கொள்ள மாவட்டச் செயலகத்தின் 0212117117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு 24 மணி நேரமும் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அரசாங்க தெரிவித்தார். அபாய குறைப்பு நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களுடன் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் தனது அலுவலகத்தில் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் மேலும் கூறுகையில்,

"அனர்த்த அபாய குறைப்பு நடவடிக்கைகளுக்கு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை கேட்டறிந்து கொண்டதுடன், அனர்த்தம் ஏற்படும் போது உத்தியோகத்தர்கள் தமது கடமையிலிருந்து விலக முடியாது.



அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரை கிராம மட்ட ரீதியாக எடுக்க வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகளுக்கான திட்டங்களை சமர்ப்பிக்க வேண்டும்."- என்றார்.

மேலும், தற்போது உடனடியாக வெள்ள நீர் வழிந்தோட-தடைகளை ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்றுவதற்கான இடங்களை உத்தியோகத்தர்களிடம் கேட்டறிந்து, அனர்த்த முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முதற்கட்டமாக 75 இலட்சம் ரூபாய் நிதியை வழங்குமாறு அரசாங்க அதிபரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டால் அந்த நிலையத்துக்கு சுழற்சி முறையில் உத்தியோகத்தர்களை கடமைகளில் ஈடுபடுத்தும் செயல்பாட்டை பிரதேச செயலாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். மேலும், உணவுப் பொதிகள், தறப்பாள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கும் போது பிரதேச செயலாளர்களின் ஒருங்கிணைப்பில் வழங்கப்பட வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் கூறினார். (எ)

## முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க வேண்டும்

### வடமாகாண ஆளுநருக்கு அவசர கடிதம்

வவுனியா, நவ. 28

வடமாகாணத்தில் நிலவும் தற்போதைய சூழலை கருத்தில் கொண்டு, முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் முத்து முஹம்மட் வடமாகாண ஆளுநருக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளார்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பு, போக்குவரத்து சிக்கல்கள் மேலும் சில பகுதிகளில் உருவாகியுள்ள அமைதியற்ற நிலை என பல காரணங்களை முன்வைத்து, நிலைமை சீராகும் வரை குறித்த பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்க வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு ஆளுநர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-10)

## விதாதா அலுவலர்களுக்கான முன்னேற்ற கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 28

விதாதா அலுவலர்களுக்கான மாதாந்த முன்னேற்ற கலந்துரையாடல் உதவி மாவட்ட செயலாளர் உ. தர்ஷினி தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கடந்த கூட்ட அறிக்கை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன. தொடர்ந்து பிரதேச செயலக ரீதியாக விதாதா நிதி ஊடாக நடைபெற்ற செயல்திட்டங்கள், உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வுகள், அடுத்த வருடத்துக்கான திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் மற்றும் விதாதா வள நிலையங்களுக்கு தேவையான கணினி தேவைப்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன. (எ)

## தகவல் தொழில்நுட்ப பூங்காவை பதிவு செய்தல் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 28

மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் தகவல் தொழில்நுட்ப பூங்காவை பதிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, அரசாங்க அதிபரால் பின்வரும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

01. மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவின் கீழ் தகவல் தொழில்நுட்ப பூங்காவை டிசெம்பர் 10 ஆம் திகதிக்குள் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தோடு, டிசெம்பர் 20 ஆம் திகதிக்குள் விரிவுரையாளர்களை நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

02. மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவின் கீழ் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் என். வி. கியூ. நிலை 03 மற்றும் என். வி. கியூ. நிலை 04 கற்கைநெறிகளை ஆரம்பித்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதற்கு அமைய, எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்க வேண்டும்.

03. ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யாது தொழிற்கல்வி நடத்தி வரும் நிறுவனங்கள் தொடர்பில் பிரதேச செயலக ரீதியாக கடமையாற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலமாக டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் மாவட்ட அரசாங்க அதிபரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (எ)

## "வெள்ள அனர்த்தம் ஏற்பட்டால் உதவி செய்ய முப்படை தயார்"

யாழ்ப்பாணம், நவ. 28

வெள்ள அனர்த்தம் ஏற்பட்டால் முப்படையினர் உதவி செய்வதற்கு தயார் நிலையில் உள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான எஸ். கபிலன் தெரிவித்தார்.

அபாய குறைப்பு நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களுடன் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தனது அலுவலகத்தில் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின் போதே கபிலன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும்,

பொதுமக்களிடமிருந்து வடிகால்கள் சீர் செய்ய வேண்டிய கோரிக்கைகள் அதிகம் கிடைக்கப்பெறுவதாகவும், வெள்ள அனர்த்தம் ஏற்பட்டால் முப்படையினர் உதவி செய்வதற்கு தயார் நிலையில் உள்ளதாகவும் கூறினார். அத்தோடு, அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் இலாபத்துக்காக மத மோதல்கள் வேண்டாம்!

## வலியுறுத்துகிறார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, நவ. 28

குறுகிய அரசியல் இலாபத்துக்காக இனமத மோதல்கள் உருவாவதை தடுக்கவேண்டும். அத்துடன், தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவை உடனடியாக அமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அமரபுர மகா பீடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் ஜனநாயகத்தை நடைமுறையில் பலப்படுத்துவதும், இனமத நல்லிணக்கத்தை வளர்ப்பதும் அனைவரின் பொறுப்பென அவர் குறிப்பிட்டார்.

பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்ட சிறப்பிடத்துடன், பிற மதங்களுக்கும் உரிய பாதுகாப்பும் மரியாதையும் கிடைத்தால், தேசிய ஒற்றுமை மேலும் வலுவாகும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (அ)

# பல பகுதிகளில் மின் தடை!

கொழும்பு, நவ. 28

சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று மின் தடைகள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மின் தடைகள் மற்றும் சிக்கல்கள் குறித்து இலங்கை மின்சார சபையின் மொபைல் செயலியைப் பயன்படுத்தி பொது மக்கள் முறைப்பாடுகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மின் விநியோகத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கான சீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

# அவசர நிலைமைகளை அறிவிக்க தொலைபேசி இலக்கம் அறிமுகம்!

கொழும்பு, நவ. 28

மோசமான வானிலை தொடர்பான அனைத்து அவசர நிலைகளையும் 117 என்ற துரித இலக்கத்துக்கு தெரிவிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொதுமக்களை கேட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் தேடல் மற்றும் மீட்புக் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு தங்குமிடம் வழங்க பாதுகாப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அதிக ஆபத்துள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் அதிகார பூர்வ எச்சரிக்கைகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும், பாதகமான நிலைமைகள் நீடிப்பதால் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# பதுளையில் உயிரிழப்புகள் எண்ணிக்கை 16 ஆக உயர்வு!

கொழும்பு, நவ. 28

பதுளை மாவட்டத்தில் நேற்று காலை 06.00 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் ஏற்பட்ட மோசமான வானிலை காரணமாக 16 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் 7 இடங்களில் ஏற்பட்ட மண்சரிவில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

பதுளை மாவட்ட செயலாளரின் கூற்றுப்படி, இந்தக் கால கட்டத்தில் 07 பேர் காணாமற் போயுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக பதுளை மாவட்டத்தின் பல இடங்களில் ஏற்பட்ட மண் சரிவுகள் மற்றும் பாறைகள் சரிந்ததில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பொதுமக்கள் நாளை வரையில் அவதானமாக இருக்கவேண்டும்

கொழும்பு, நவ. 28

நாட்டின் பெரும்பாலான நில மற்றும் கடல் பகுதிகளில் நீடிக்கும் கடுமையான வானிலையைக் கருத்தில் கொண்டு, வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்கான எச்சரிக்கையையும் கண்காணிப்புக் காலத்தையும் நீடித்துள்ளது.

திணைக்களம் வெளியிட்ட அறிக்கையின்படி, பொதுமக்கள் நாளை வரை மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் தென் கிழக்கு திசையிலிருந்து வட மேற்கு திசை நோக்கி நகரும் குறைந்த அழுத்தப் பிரதேசம் காரணமாக, அடுத்த 24 மணித்தியாலங்களில் மிகக் கனமழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் சில பகுதிகளில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மிகக் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கனமழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என திணைக்களம் தெரிவித்துள்ளது. சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகலாம். (அ)

# அமெரிக்கா - இலங்கை கூட்டாண்மை தூதுவர் ஜூலி சங், ஜனாதிபதி சந்திப்பு



கொழும்பு, நவ. 28

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவின் வலிமையை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக, நேற்று முன் தினம் புதன்கிழமை அமெரிக்க தூதுவர் ஜூலி சங், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்தார்.

இச்சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவது, எதிர்வரும் புதிய ஆண்டில் ஒன்றிணைந்த முன்னேற்றத்தை விரிவுபடுத்துவது, அரசியல், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை ஆழப்படுத்துவது குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அதேபோல், அமெரிக்காவின் மூலதன நலன்களுக்கு உதவும் வகையில், இரு நாடுகளுக்கும் பயன் உள்ள புதிய வாய்ப்புகளை உருவாக்குவது குறித்து கருத்துகள் பரிமாறப்பட்டன.

இந்த சந்திப்பு குறித்து அமெரிக்கத் தூதுவர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது-"அமெரிக்கா-இலங்கை கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கான எங்கள் உறுதி தொடரும். இது இரு நாடுகளுக்கும் சமமான நன்மைகளை வழங்கும்" என்று அமெரிக்க தூதர் குறிப்பிட்டார். (அ)

# வாகனங்களின் விலை குறையும்!

கொழும்பு, நவ. 28

இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான "தடைப்பட்ட தேவை" தற்போது ஸ்திரமடைந்து வருவதாகவும், சந்தை நிலைமைகள் மேம்படுவதால் வாகனங்களின் விலை மேலும் குறையும் என்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் நாணயக் கொள்கை மீளாய்வுக் கூட்டத்தின் போதே அவர் இதனைக் கூறினார்.

ஜூலை, ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் திறக்கப்பட்ட கடன் கடிதங்கள் அதிகரித்தமையால் வாகனங்களுக்கான தேவை எதிர்பார்த்ததை விட அதிகமாக காணப்படுகிறது.

எவ்வாறாயினும், கடந்த இரண்டு மாதங்களாக இந்தத் தேவை குறைந்து வருவதாகவும், இது தொடர்ந்தும் குறைவதற் கான அறிகுறிகள் காணப்படுவ தாகவும், இந்தத் தேவைக் குறைவு , மோட்டார் வாகனங்களின் விலை மேலும் வீழ்ச்சியடைய வழிவகுக்கும் என்று எதிர்பார்க் கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக பகுதிகளில் கனமழையால் வெள்ளத்தில் மூழ்கியது நுவரெலியா!

## ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் மண்சரிவு, மக்கள் பாதிப்பு




ஹற்றன், நவ. 28

மலையக பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக நேற்று நுவரெலியா நகரத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

நுவரெலியா புத்த மந்திர மாவத்தை, நுவரெலியா பஸ் நிலையம், ஹவாஎலியா மருத்துவமனை மாவத்தை உள்ளிட்ட பல முக்கிய வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்ததால், பொதுமக்கள் அசௌகரியத்துக்குள்ளாகினர்.

இதற்கிடையில், தலவாக்கலை சென். கிளயார் தோட்டப் பகுதியில் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக, அந்த வீதியின் போக்குவரத்து ஒரு வழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கனமழை தொடர்ந்து பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (எ)



# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் திறப்பு

நுவரெலியா, நவ. 28

மேல் கொத்மலை நீர்த்தேக்கப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் நேற்று அதிகாலை முதல் திறக்கப்பட்டுள்ளதாக நீர்த்தேக்க பொறியலாளர்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் மழை மேலும் அதிகரித்தால், மீதமுள்ள வான் கதவுகளும் திறக்கப்படக்கூடும். எனவே, அணையின் கீழ்ப்பகுதியில் கொத்மலை ஓயாவை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் சென்கிளயார் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது.

இதேவேளை, மேல் கொத்மலை அணைக்கு கீழே அமைந்துள்ள காமினி திஸநாயக்க நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வான் மட்டத்தை நெருங்கியுள்ளதால், அதன் வான்கதவுகள் தானாகவே திறக்கப்படவுள்ளன.

இதற்கமைய, நுகாவெல ஆற்றங்கரை, மாவத்துரை, மகாவலி கங்கை, உலப்பனே, கம்பளை, பெரலிய, வெலியியல், கட்டுகஸ்தோட்டை, பொல்கொல்ல உள்ளிட்ட கொத்மலை ஓயா கீழ்பகுதிகளிலுள்ள குடியிருப்போர் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு, நீர்த்தேக்க பொறுப்புப் பொறியலாளர் ஏ.கே. செனவிரத்ன விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சீரற்ற வானிலை காரணமாக ரயில் சேவைகள் பாதிப்பு

கொழும்பு, நவ. 28

சீரற்ற வானிலை காரணமாக அனைத்து ரயில் சேவைகளுக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கரையோர ரயில் மார்க்கம் மற்றும் களனிவெளி ரயில் மார்க்கத்தில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளமையால் அந்த மார்க்கங்களில் ரயில் சேவைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு ரயில் மார்க்கம் வெல்லவ பகுதியில் நீரில் மூழ்கியுள்ளதால் வடக்கு ரயில் மார்க்கத்திலான ரயில் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும், புத்தளம் ரயில் மார்க்கத்திலும் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், சீரற்ற வானிலை காரணமாக மலையகக் ரயில் மார்க்கத்தில் கொழும்பு கோட்டை - பதுளை இடையே இயங்கும் அனைத்து ரயில்களையும் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை நானுஓயா வரை மட்டுமே இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# விமலசுரேந்திர நீர்த்தேக்கம் வான்பாய்கிறது

நுவரெலியா, நவ. 28

நோர்டன்பிரிட்ஜ் விமலசுரேந்திர நீர்த்தேக்க பகுதியில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக, விமலசுரேந்திர நீர்த்தேக்கம் முழுமையாக நிரம்பி மேலதிக நீர் நேற்றுக் காலை முதல் வான் மேவி பாய்கின்றது.

நீர்மட்டம் அதிகரித்ததன் காரணமாக களனி ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதனுடன், காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் விரைவாக உயர்ந்து, நிரம்பி வழியும் நிலையை நெருங்கி வருவதாக பொறியலாளர்கள் கூறினர்.

மேலும், கெனியன், லக்பான, நவ லக்ஷபான, பொல் பிட்டிய மற்றும் விமலசுரேந்திர நீர்த்தேக்கங்களின் மின் உற்பத்தி கொள்ளளவு அதிகபட்ச மட்டத்தில் செயல்படுத்தப்படுவதையும் அவர்கள் தெரிவித்தனர். (எ)

# திருமலை புத்தர் சிலை விவகாரம்: பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை

திருகோணமலை, நவ. 28

திருகோணமலை கோட்டை வீதியின் கடற்கரையோரமாக அனுமதியற்ற கட்டுமானம் ஒன்றை கடந்த 15 ஆம் திகதியன்று புதிதாக அமைத்த பௌத்த பிக்கு மற்றும் அவருடன் உடனிருந்தவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 14ஆம் திகதி திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிபதி எம். சம்சுடீன் நேற்று முன்தினம் புதன்கிழமை அழைப்பாணை விடுத்துள்ளார்.

திருகோணமலை சிறீ சம்புத்த ஜயந்தி போதிராஜ விகாராதிபதி கல்யாணவன்ஸ திஸ்ஸ தேரர் மற்றும் அவருடன் இருந்த சிலருக்கு எதிராக கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களமும், திருகோணமலை துறைமுக பொலிஸாரும் முன்வைத்த மனுவை ஆராய்ந்த பின்னர் இவ் வழக்கில் எதிராளிகளாக குறிப்பிடப்பட்டவர்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி அடுத்த தவணை அன்று இது தொடர்பான விரிவான அறிக்கையை பொலிஸார் மன்றுக்கு முன்வைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் சார்பில் அதன் திருகோணமலை மாவட்ட அதிகாரிகளும், திணைக்களம் சார்பாக சட்டத்தரணியும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதேவேளை பொலிஸ் தரப்பில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், திருகோணமலை பிரிவுக்கான பொலிஸ் அத்தியட்சகர், துறைமுக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

எதிராளிகளோ அவர்களது சார்பில் சட்டத்தரணிகளோ மன்றில் முன்னிலையாகி இருக்கவில்லை. (எ)



# காரைதீவு மற்றும் மாவடிப்பள்ளி பிரதான வீதி முழுமையாக மூடல்

காரைதீவு, நவ. 28

தொடர்ச்சியாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக, அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவு மற்றும் மாவடிப்பள்ளி பகுதிகளை இணைக்கும் பிரதான வீதி நேற்றுக் காலை முதல் காலவரையின்றி முழுமையாக மூடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்த வீதியில் நீர்மட்டம் அபாயகரமான அளவுக்கு உயர்ந்து காணப்படுவதால், பொதுமக்கள் மற்றும் வாகனங்களின் பாதுகாப்புக் கருதி இந்த அத்தியாவசிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதியின் குறுக்கே நீர் பாய்வதாலும், பல இடங்களில் வெள்ள நீர் தேங்கியிருப்பதாலும், பாதையின் நிலைமை உறுதி அற்றதாக மாறியுள்ளது. இதனால், வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகாமல் தடுக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ-06)

# வழக்குகள் ஒத்திவைப்பு

சம்மாந்துறை, நவ. 28

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் அசாதாரண காலநிலை, வெள்ளப்பாதிப்பு காரணமாக பொதுமக்களின் பாதுகாப்பு கருதி சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அனைத்து வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

27 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் அனைத்தையும் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி நடத்துவதற்கும், 28ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் யாவும் ஜனவரி மாதம் 22 ஆம் திகதியும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (எ-08)

# முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் விபத்தில் பலி

கிண்ணியா, நவ. 28

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிண்ணியா - கொழும்பு பிரதான வீதியின் வில்வெலி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் கிண்ணியா பிரதேச சபையின்

முன்னாள் உறுப்பினர் ஸ்தலத்தில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. கிண்ணியா சூரங்கல் பகுதியைச் சேர்ந்த இப்னு (வயது-56) எனும் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவாகியது...

02.12. 2025 அன்று வட தமிழகத்தில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது புயலின் மையம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் உள்ளமையால் இப்பகுதிகளில் ஒரு அசாதாரண அமைதி நிலவும். ஆனால் அது நிலையானதல்ல.

இந்த புயலினால் நாடு முழுவதற்கும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மிகக் கனமழை கிடைக்கும்.

அம்பாறைக்கு இன்று பிற்பகல் முதல் படிப்படியாக மழை குறையும். ஆனாலும் எதிர்வரும் 30.11.2025 வரை மழை கிடைக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு எதிர்வரும் நாளை முதல் மழை படிப்படியாக குறைவடையும்.

ஆனால் திரு கோணமலை மாவட்டத்திற்கு இன்றும் நாளையும் மிகக் கனமழை கிடைக்கும்.

வவுனியா மாவட்டத்துக்கு இன்றும் நாளையும் மிகக் கனமழை கிடைக்கும். எதிர்வரும் 01.12.2025 அன்றும் வவுனியாவின் பல பகுதிகளுக்கும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இன்றும் நாளையும் மிகக் கனமழை கிடைக்கும். எதிர்வரும் 01 மற்றும் 02.12.2025 அன்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

தற்போதைய நிலைமைகளின் படி மன்னார் மாவட்டத்துக்கு இன்று முதல் எதிர்வரும் 01.12.2025 வரை மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்தோடு அனுராதபுரத்தில் கிடைக்கும் கனமழையும் குளங்களின் வான் பாயும் நீரும் ஏற்கனவே குறிப்பிட்டபடி அருவியாற்றின் முகத்துவாரம் மற்றும் கீழ் நீரேந்து பிரதேசங்களில் வெள்ள அனர்த்தத்தை உருவாக்கும்.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்கள் படிப்படியாக நேற்று இரவு முதல் கனமழை முதல் மிகக் கனமழையை எதிர்கொள்ளும். இது எதிர்வரும் 02.12.2025 வரை தொடரும்.

தற்போது திருகோணமலை மற்றும் வடக்கு மாகாணத்தில் காற்று மணிக்கு 50-60 கி.மீ. வேகத்தில் வீசுகின்றது. இது இன்று இன்னமும் அதிகரிக்கும்.

இன்றும் தென், ஊவா மற்றும் சபரகமுவா மாகாணங்களுக்கு மிகக் கனமழை கிடைக்கும். ஆனால் நாளை பிற்பகல் முதல் மழை படிப்படியாக குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய மற்றும் மேற்கு மாகாணங்களுக்கு இன்றும் நாளையும் கனமழை முதல் மிகக் கனமழை கிடைக்கும். ஆனால் எதிர்வரும் 30.11.2025 முதல் மேல மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தில் மழை குறைவடையும்.

இந்த புயலின் நகர்வுப்பாதை இதுவரை இல்லாதது போன்று அமையும் என தோன்றுகின்றது. இது அசாதாரணமானது. வட மாகாணம் முழுவதையும் உள்ளடக்கிய வடக்கு நோக்கிய நகர்வு முற்றிலும் புதியது. 1867ம் ஆண்டு இலங்கையில் முதல் முதலாக நில அளவைத் திணைக்களத்தின் கீழ் விஞ்ஞான முறைகளிலான வானிலை அவதானிப்பு ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை இது போன்ற நகர்வுப் பாதையை எந்த புயலோ, தாழமுக்கமோ கொண்டிருந்ததில்லை. வரலாற்றில் இதுவே முதல் முறை-என்றார். (அ)

## இயற்கை...

எழுச்சிபூர்வமாக இடம்பெற்றது.

வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வருடந்தோறும் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த வருடமும் மாவீரர் நாள் நினைவேந்தல் நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

**முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில்...**

முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் என பெருந்திரளானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒன்றுதிரண்டு உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் துயிலுமில்ல வளாகத்தில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டதை அடுத்து ஏனைய சுடர்கள் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்ததுடன் பெருந்திரளான பொதுமக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டு அஞ்சலியினை செலுத்தி இருந்தனர்.

**அளம்பில் துயிலும் இல்லத்தில்...**

முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் இடைவிடாத கொட்டும் மழையிலும் மாவீரர்நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது. சரியாக மாலை 06.05மணிக்கு மணி ஓசை எழுப்பப்ப ட்டு, தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டதைய டுத்து மாவீரர்களுக்கான பிரதான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அத்தோடு சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டதுடன், மாவீரர்களின் உறவுகள் கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் நினைவேந்தலை மேற்கொண்டனர்.

**கொடிகாமம் துயிலும் இல்லத்தில்....**

மாவீரர் தின நிகழ்வு யாழ்ப்பாணம் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தந்தை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து ஏனைய தீபங்கள் ஏற்றப்பட்டு அக வணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

**சாட்டி துயிலும் இல்லத்தில்...**

யாழ் தீவகம் சாட்டி துயிலும் இல்லத்தில் மாலை 06.05 மணி ஒலி எழுப்பப்பட்டு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்களால் சுடர்களை ஏற்றப்பட்டு மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர்

அதனைதொடர்ந்து நினைவு கற்களுக்கு மலர்மாலை அணியப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது

**ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தில்...**

வவுனியா ஈச்சங்குளத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

இதன்போது பிரதான ஈகச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டன. ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை இராணு வம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள நிலையில் அதற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் குறித்த மாவீரர்தின நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

**வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில்...**

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் கொட்டும் மழையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வுபூர்வமாக நரடைபெற்றன. மட்டக்களப்பு வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது. பெருமளவான மாவீரர்களின் உறவினர்களின் பங்கு பற்றுதலுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

**மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில்**

தற்போது நிலவி வருகின்ற வெள்ள அனர்த்த நிலைமைக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள், உள்ளிட்ட பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு ஈகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் அதிகளவான மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில்...**

மாவீரர் தினத்தையொட்டி மன்னார் ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விட்டு உணர்வுபூர்வமாக மாவீரர் நினைவு தினம் நேற்று மாலை நினைவு கூரப்பட்டது.

ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவினால் நினைவேந்தல் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள் பெருந்திரளான மக்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டு கண்ணீர் மல்க உணர்வு பூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

**கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில்...**

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவேந்தல் நடைபெற்றது.

நேற்று மாலை 6.05 நிமிடத்தில் மாவீரர்களுக்கான பொதுச் சுடர் ஏற்றி நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது.

**ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில்...**

சம்பூர் ஆலங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினால் நேற்று சம்பூர் - ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமான முறையில் இடம்பெற்றது.

இதன்போது மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு பொதுச்சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது. சீரற்ற காலநிலையினையும் பொருட்படுத்தாது பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

**யாழ்.பல்கலையில்**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபியில் மாலை6.05 மணியளவில் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நினைவேந்தல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மாவீரர்கள் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**நல்லூரில்**

மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்று நல்லூரியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

சரியாக 6.05 மணிக்கு மணி ஒலிக்க, 6.06 மணிக்கு மௌன வணக்கம் செலுத்தப்பட்டு, கெப்டன் பண்டிதரின் தாயார் பொதுச் சுடர் ஏற்றி வைக்க, அதேவேளை துயிலும் இல்ல கீதம் இசைக்க, ஏனைய சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டது. உள்நாட்டுப் போரில் உயிர்நீத்தவர்களுக்காக உணர் வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

நல்லூர் வளாகத்தில் அமைக்கப்பட்ட மாவீரர்களின் கல்வெட்டுக்களையும் இதன்போது மக்கள் பார்வையிட்டனர்.

**கொடிகாமத்தில்**

மாவீரர் வார இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் தென்மராட்சி - கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை இடம் பெற்றது.

மாலை 6.05 மணியளவில் மணி ஒலிக்கப்பட்டு பொதுச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

பொதுச்சுடரை லெப்டினன் மேரியனின் தாயார் கந்தையா நாகராணியும், நட்டுப்பற்றாளர் கந்தையா காண்டீபன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

**கோப்பாயில்**

யாழ்ப்பாணம் , கோப்பாய் துயிலுமில்லத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தலில் மூன்று மாவீரர்களின் தாயான நடேசு தவமணி பொது சுடரினை ஏற்றி வைத்தார்.(அ)

## நிவாரணங்களை...

வளாகத்தில் நடைபெற்ற சிறப்புக் கலந்துரையாடலில் பங்கேற்றபோது ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார். ஒவ்வொரு மாவட்டத்திலும் அனைத்து பகுதியிலும் உள்ள ஆபத்து நிலைமை மற்றும் எதிர்காலத்தில் ஏற்ப டக்கூடிய சாத்தியமான பேரழிவுகளை அடையாளம் காணவும், மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் நிவாரணங்களை வழங்க உடனடியாக தலையிடவும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு அறிவுறுத் தினார்.

மக்களின் பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதாரம் உள்ளிட்ட நிவாரண சேவைகளை தொடர்ந்து வழங்குவது குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. உயர்தரப் பரீட்சை நடத்துதல் மற்றும் தொடர்ச்சியான கல்வி நடவடிக்கைகள் குறித்தும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து தங்குமிடங்களை இழந்து முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உலர் உணவு, அத்தியாவசிய தேவையுடைய பொருட்களையும் வழங்க வேண்டிய ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

நீர்ப்பாசன அமைப்பு மற்றும் அதன் பாதுகாப்பு குறித்தும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டதுடன் கன மழை ஏற்பட்டால் நீர்ப்பாசன முறையை நிர்வகிக்க அதை உன்னிப்பாக ஆய்வு செய்யவும் மகாவலி மற்றும் நீர்ப்பாசன துறை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மேலும் அறிவுறுத்தினார். (அ)

## சீரற்ற...

செய்யப்பட்டுள்ளது.அந்த இரண்டு நாட்களிலும், திட்டமிடப்பட்ட விவாதங்கள் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும். அதே நேரத்தில் இன்று மற்றும் நாளை நடைபெறவிருந்த விவாதங்கள் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6.00 மணி முதல் இரவு வரை நடைபெறும். (அ)

## உயர்தரப்...

குறிப்பிடத்தக்கது. திங்கட்கிழமை முதல் வழக்கம் போல் பரீட்சைகள் நடைபெறும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ)

## மோசமான...

பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டமே பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. இந்த மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் பெய்த அடைமழை மற்றும் மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களால் 31 பேர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காணாமல்போயுள்ளனர்.

அத்துடன் இந்த மாவட்டத்தில் 886 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 89 பேர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த 24 மணிநேரத்தில் கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 4 பேர் மாயமாகியுள்ளனர்.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக கடந்த 24 மணிநேரத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காணாமல்போயுள்ளனர்.

இதேவேளை, பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் எந்தவொரு அவசரகால சூழ்நிலைகளையும் 117 என்ற அவசர தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பேரிடர் மேலாண்மை மையம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

## இந்திய...

அனைத்து கடலோரப் பகுதிகளும் பாதுகாப்பாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மைய வாரங்களில் இப்பகுதியில் ஏற்படும் முதல் மிதமான நிலநடுக்கம் இதுவாகும். (அ)

## ஏ9 வீதியில்...

இதனால் கனரக வாகனங்களைத் தவிர சிறிய வாகனங்கள் போக்குவரத்து செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்வாய்க்குள் கார் கவிழ்ந்து விபத்து: ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பலி!

## சாய்ந்தமருது பகுதியில் துயரம்



கல்முனை, நவ. 28

வெள்ளம் நிரம்பிய கால்வாய்க்குள் கார் ஒன்று கவிழ்ந்து மூழ்கியதில் அந்த காரில் பயணித்த மூவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவில் உள்ள கரைவாகுப்பற்று பொலிவேரியன் குடியேற்றப்பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

அனர்த்த முகாமைத்துவ குழுவினர், சாய்ந்தமருது பிரதேச செயலக அனர்த்த செயலணி பொலிஸார் இணைந்து மேற்கொண்ட மீட்புப்பணியின் போது கால்வாயில் வீழ்ந்த கார் மீட்கப்பட்டது.

காரில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மீட்கப்பட்டு கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். இருப்பினும் தாய், தந்தை மற்றும் மகள் என மூவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-01)

# வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது பஸ்!

## பயணிகள் பாதுகாப்பாக மீட்பு

கொழும்பு, நவ. 28

மொனராகலை - கொழும்பு பிரதான வீதியில் பஸ் ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், பிரதேசவாசிகள் இணைந்து பஸ்ஸில் இருந்த பயணிகளை பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தம் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.சுமார் 23 பயணிகள் பயணித்த தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தின்போது எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

# வடக்கு மீனவர்கள் பிரச்சனை தமிழ் எம்.பிக்கள் மௌனம்!

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்



கொழும்பு, நவ. 28

வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் தமிழ் நாட்டு மீனவர்களின் ஆக்கிரமிப்பு மற்றும் இழுவை மடிப்படகு பாவனை தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் போதுமான அளவில் குரல்கொடுக்காமல் இருப்பதே இந்த பிரச்னைகளுக்கு பிரதான காரணமாகும் என கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றம்சாட்டி னார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத்திட்டத்தில் கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு மற்றும் டிஜிற்றல் பொருளாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தின்போது, இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட எம்.பியான துரைராஜா ரவிகரனால் இந்திய இழுவைப் படகுகளின் வருகை மற்றும் சட்டவிரோத மீன்பிடி முறைகள் தொடர்பில் முன்வைத்த கருத்துக்களுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குற்றம்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மீனவர்கள் அதிகமாக பாதிக்கப்படுவதற்கு இழுவைமடிப்படகு பிரதான விடயமாக உள்ளது. இந்திய தமிழ்நாட்டு மீனவர்களின் ஆக்கிரமிப்பு இதற்கு காரணமாகும். ஆனால் இது தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் போதுமான அளவுக்கு குரல்கொடுப்பதில்லை.

அங்கு சட்டவிரோத மீன்பிடி முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த முறைகளுக்கு காரணமானவர்கள் யார் என்பதனை நீங்கள் நன்கு அறிவீர்கள். இவ்வாறு சட்டவிரோத மீன்பிடி முறைகளால் எமது வட கடலே இல்லாமல் போகும் நிலைமை உள்ளது. அந்த அழிவான வேலைகளை செய்பவர்கள் யார் என்பது நன்றாக தெரியும். அவர்களின் பெயர்களை நான் குறிப்பிடுவது உங்களுக்கு நல்லதில்லை என்று நினைக்கின்றேன். அவைகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்-என்றார். (அ)

# வலப்பனை மண்சரிவு நான்கு பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 28

வலப்பனை பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை ஏற்பட்ட மண்சரிவினால் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு வீடுகள் மண் சரிவில் பாதிக்கப்பட்டு மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதேவேளை, கண்டி மாவட்டத்தில் 4 பேர் காணாமல் போயுள்ளதாக மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த தெரவித்தார்.

உடதும்பறை மற்றும் பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர்கள் பிரிவுகளில் இச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. (அ)

ஒன்றிணையும் கட்சிகள்

# சஜித் பிரேமதாஸவின் முடிவுக்கு ஐக்கிய தேசிய கட்சி இணக்கம்!

கொழும்பு, நவ. 28


ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எடுத்த தீர்மானத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனிப்பட்ட ரீதியில் முன்வந்துள்ளமை குறித்து விசேட நன்றியைத் தெரிவித்துக்கொள்வ தாகவும் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

இரண்டு கட்சிகளின் இணைப்பு தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள மற்றும் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க ஆகியோர் அடங்கிய மூவர் கொண்ட குழுவொன்றை நியமிக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான அனைத்துக் கலந்துரையாடல்களும் நியமிக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட குழுவினால் முன்னெடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது. (அ)

# நூற்றாண்டுகள் பழைமையான பெந்தோட்டை பாலம் இடிந்தது!



கொழும்பு, நவ. 28

சீரற்ற வானிலையின் தாக்கத்தால் 1902ஆம் ஆண்டு கட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பெந்தோட்டை பழைய பாலம் இடிந்து வீழ்ந்துள்ளது.

தீவிரமான மழைப்பொழிவு, பலத்த காற்று மற்றும் ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்ததன் விளைவாக, இந்த பழமையான பாலத்தின் பகுதி சரிந்துள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சுமார் 123 ஆண்டுகளாக பெந்தோட்டைப் பகுதியை இணைத்து வந்த இந்த பாலம், இலங்கையின் முக்கிய வரலாற்று பொக்கிஷங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

காலநிலை மேலும்மோசமடையக்கூடும்என்பதால்குறித்த பகுதிக்கு பொதுமக்கள் செல்லவேண்டாம் எனவும், போக்குவரத்து மாற்று பாதைகளுக்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பாரிய நீர்ப்பாசன குளங்களால் தற்போதைக்கு ஆபத்து இல்லை!

## வடக்கு நீர்ப்பாசனப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு மாகாண நீர்ப்பாசனக் குளங்களின் தற்போதைய நிலை தொடர்பான விவரங்கள் வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் பொறியியலாளர் த.இராஜகோபுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள 54 பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களின் நேற்றைய நிலவரம் தொடர்பான அறிக்கையை வெளியிட்ட மாகாணப் பணிப்பாளர் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் பெய்த கனமழையினால் 13 நடுத்தர குளங்கள் வான் பாய்கின்றபோதிலும், மாகாணத்திலுள்ள பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் தற்போதைக்கு எவ்வித ஆபத்து நிலைகளும் கண்டறியப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மழைவீழ்ச்சி நிலவரம் நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் நேற்றுக் காலை 7 மணி வரை) கடந்த 24 மணித்தியாலங்களில் வவுனியா மாவட்டத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

வவுனியா நிலையம்: 165 மி.மீ

சேமமடு நிலையம்: 151 மி.மீ

தண்ணிமுறிப்பு நிலையம்: 125 மி.மீ அதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் தொண்டமானாறு பகுதிகளில் மிகக் குறைந்தளவான மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது.

குளங்களின் நீர்மட்டம் மற்றும் கொள்ளளவு விவரம்:- வடக்கு மாகாணத்திலுள்ள 54 பாரிய மற்றும் நடுத்தர குளங்களில்:

13 குளங்கள் வான் பாய்கின்றன.

08 குளங்கள் 75 வீதம் - 100 வீதம் வரை நிரம்பியுள்ளன.

12 குளங்கள் 50 வீதம் - 74 வீதம் வரை நிரம்பியுள்ளன.

19 குளங்கள் 50 வீதத்திற்கு குறைவாகவே நிரம்பியுள்ளன.

முக்கிய பாரிய குளங்களின் நீர்மட்டம்:-

பிரதான குளங்களின் நீர்மட்டம் தற்போது பாதுகாப்பான அளவிலேயே உள்ளது.

இரணைமடு குளம்: 21" 11" (35.22 வீத கொள்ளளவு)

வவுனிக்குளம்: 15" 09" (34 வீத கொள்ளளவு)

முத்தையன்கட்டு குளம்: 14" 03" (40 வீத கொள்ளளவு)

சில பகுதிகளில் கணிசமான மழை பெய்துள்ளதால் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது. எவ்வாறாயினும், எந்தவொரு நீர்த்தேக்கத்திலோ அல்லது நீர்ப்பாசனத் திட்டங்களிலோ தற்போதைக்கு எவ்வித ஆபத்துகளும் அடையாளம் காணப்படவில்லை- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.